செ.வெ. எண்: 466 நாள்: 19.7.2011

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில்**
**அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின்**
**பணிகள் குறித்து ஆய்வு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் செயல்படும் 110 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் இன்று (19.7.11) மாலை 2.00 மணியளவில் சென்னையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

அப்போது மாநிலத்தில் உள்ள அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வணிகத்தை மேம்படுத்தும் நோக்கோடு தகவல் தொழில் நுட்பத்தில் புதிய உத்திகளைப் புகுத்துதல், ஏல விற்பனை மையங்களை மேம்படுத்துதல், வேளாண் விளைபொருள்கள் விற்பனை, வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், நகைக் கடன் மற்றும் தானிய ஈட்டுக் கடன் வழங்குதல் குறித்து விவாதிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குப் பின்னர், அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களும் தங்களது வணிக நடவடிக்கைகளை பன்மடங்கு உயர்த்தவும், அனைத்து சங்கங்களின் இலாபத்தை அதிகரிக்கும் பொருட்டு பணியாற்ற வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.ராஜேந்திரன், இணைப்பதிவாளர் திருமதி கா.பிரமிளா மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**